www.Padasalai.Net www.Trb Tnpsc.com

வகுப்பு : 9

தேர்வு எண்

# ஆண்டுப் பொதுத் தேர்வு - 2023-24

நேரம் : 3.00 மணி]

## தமிழ்

[மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

1. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி
(அ) சொல் பின்வரு நிலையணி (ஆ) பொருள் பின்வரு நிலையணி
(இ) சொற்பொருள் பின்வரு நிலையணி (ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

2. நீர்நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
(அ) அகழி (ஆ) ஆறு (இ) இலஞ்சி (ஈ) புலரி

3. தமிழ் விடு தூது -------- என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
(அ) தொடர்நிலைச் செய்யுள் (ஆ) புதுக்கவிதை
(இ) சிற்றிலக்கியம் (ஈ) தனிப்பாடல்

4. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை
(அ) நிலையற்ற வாழ்க்கை (ஆ) பிறருக்காக வாழ்தல் (இ) இம்மை மறுமை (ஈ) ஒன்றே உலகம்

5. இறந்த காலத்திற்கேற்ற வினைமுற்றுச் சொல்லைத் தேர்க.
(அ) வந்தேன் (ஆ) வருகிறாய் (இ) வருவோம் (ஈ) வரும்

6. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
(அ) திசைச்சொற்கள் (ஆ) வடசொற்கள் (இ) உரிச்சொற்கள் (ஈ) தொகைச்சொற்கள்

7. தீரா இடும்பை தருவது எது?
(அ) ஆராயாமை, ஐயப்படுதல் (ஆ) குணம், குற்றம்
(இ) பெருமை, சிறுமை (ஈ) நாடாமை, பேணாமை

8. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?
(அ) தேசியத் திறனறித் தேர்வு (ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
(இ) தேசியத் திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு (ஈ) மூன்றும் சரி

9. <u>பூவாது</u> காய்க்கும். <u>மலர்க்கை</u> – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
(அ) பெயரெச்சம், உவமைத்தொகை (ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
(இ) வினையெச்சம், உவமை (ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

10. இரு இடங்களை நிரப்பும் ஒரு சொல்லைத் தேர்க.
எண்ணெய் ஊற்றி ------ விளக்கு ஏற்றியவுடன், இடத்தை விட்டு ---------
(அ) விலங்கு (ஆ) எழுதி (இ) அகல் (ஈ) அலை

11. மரபுப் பிழையற்ற தொடரைத் தேர்க.
(அ) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்
(ஆ) நேற்று தென்றல் காற்று அடித்தது
(இ) அணில் பழம் சாப்பிட்டது (ஈ) கொடியிலுள்ள மலரை எடுத்து வா

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். (12,13,14,15)

*"தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்*
*பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்*
*பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்"*



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

12. பொலம் – என்ற சொல்லின் பொருள்

(அ) பொன் (ஆ) குற்றம் (இ) மன்றம் (ஈ) திண்ணை

13. பரப்புமின் என்பதன் இலக்கணக்குறிப்பு

(அ) உரிச்சொல் தொடர் (ஆ) வினைத் தொகை (இ) ஏவல் வினைமுற்று (ஈ) பண்புத்தொகை

14. அடி எதுகைச் சொற்களைத் தேர்க.

(அ) பூரண, பாவை (ஆ) தோரண, பாவை (இ) கோட்டியும், பரப்புமின் (ஈ) தோரண, பூரண

15. இச்செய்யுள் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் –

(அ) பெரியபுராணம் (ஆ) குடும்பவிளக்கு (இ) மணிமேகலை (ஈ) இராவணகாவியம்

**பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4X2=8**

16. உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?

17. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

18. கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

19. ‘கூவல்’ என்று அழைக்கப்படுவது எது?

20. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

21. ‘எனைத்தானும்’ எனத்தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5X2=10**

22. கலைச்சொல் தருக

அ) Missile ஆ) Classical literature

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக.

சேர்ந்து – சேர்த்து

23. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

விரித்த

24. பொருள் எழுதித் தொடரமைக்க.

அலை, அழை

25. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்பு தருக.

26. பசுமரத்தாணி போல – இவ்வுவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் எழுதுக.

27. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

28. பிழை நீக்கி எழுதுக.

அ) மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.

ஆ) மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை செய்கின்றன.

**பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2X3=6**

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.

பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவ இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி, மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

வினாக்கள்:

அ) மாமல்லபுரச் சிற்பங்கள் யாருடைய சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்?

ஆ) மாமல்லபுரத்தில் உருவாக்கப்பட்ட சிற்ப இரதங்களின் பெயர் என்ன?

இ) பல்லவர்காலச் சிற்பங்கள் காணப்படும் இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

30.சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

31.பனியிலும், மலையிலும் எல்லையைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.

பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2X3=6

34–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32.நாம் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

33.உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.

34.அடி பிறழாமல் எழுதுக.

அ) 'காடெல்லாம் கழைக்கரும்பு' எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடல்.

(அல்லது)

ஆ) 'ஆக்குவது ஏதெனில்' எனத் தொடங்கும் யசோதர காவியப் பாடல்.

பிரிவு – 3 (மதிப்பெண்கள்:6)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2X3=6

35.உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

36.பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு எழுதுக.

37.தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5X5=25

38.அ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ) ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.

39.அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய நூல் ஒன்றினைக் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

41. தன்விவரக்குறிப்பினை நிறைவு செய்க.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

42. அ) உங்கள் பெற்றோர் மகிழுமாறு நீங்கள் செய்ய வேண்டிய செயல்களில் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) தமிழில் மொழிபெயர்க்க.

i) Every flower is a soul blossoming in nature - **Gerard De.Nerval.**

ii) Sunsel is still my favourite colour, and rainbow is second - **Mattie Stepanek.**

iii) An early morning walk is a blessing for the whole day - **Henry David Thoreau.**

iv) Just living is not enough..... One must have sunshine, freedom and a little flower.

**- Hans christain Anderson**

**குறிப்பு: செவிமாற்றுத் திறனாளருக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

கலைஞரின் நாவும் பேனாவும் தமிழுக்கு ஆயுதங்கள், இயல் எழுதி, இசை எழுதி, நாடகம் எழுதி, முத்தமிழுக்கு தம் பங்கினை முழுமையாக அளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். மு.கருணாநிதி அவர்கள் தொல்காப்பியப் பூங்கா, சங்கத்தமிழ், குறளோவியம், திருக்குறள் உரை, சிலப்பதிகார நாடகம், தென்பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர் என 178க்கும் மேற்பட்ட படைப்புகளைச் செந்தமிழுக்குச் சுவையாய் ஆக்கித் தந்திருக்கிறார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க வழிகாட்டியுள்ளார். தொல்காப்பியம், பதினெண்மேல்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு, இரட்டைக்காப்பியம், முத்தொள்ளாயிரம் இறையனார் களவியல் ஆகிய 41 செவ்வியல் இலக்கியங்களை ஆய்வு செய்தல், மொழி பெயர்த்தல், பதிப்பித்தல் போன்ற பணிகளை வரையறுத்து செம்மொழி உயராய்வு மையத்திற்கு உயிரூட்டினார்.

**வினாக்கள்:**

1. முத்தமிழுக்கும் தம் பங்கினை முழுமையாக அளித்தவர் யார்?
2. முத்தமிழறிஞர் கலைஞரின் செந்தமிழ்ப் படைப்புகள் இரண்டினை எழுதுக.
3. எந்நிறுவனம் அமைக்கக் கலைஞர் வழிகாட்டியுள்ளார்?
4. செவ்வியல் இலக்கியங்களுக்குக் கலைஞர் வரையறுத்து ஆற்றிய பணிகள் யாவை?
5. செம்மொழி உயராய்வு மையத்திற்கு உயிரூட்டியவர் --------

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43. அ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகளாரின் வழி நிறுவுக.

44. அ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

(அல்லது)

ஆ) 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப்படைப்பை விளக்குக.

45. குறிப்புகளைக் கொண்டு 'சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை – உயிர்ப் பாதுகாப்பின் முதல்படி – வேகக்கட்டுப்பாடு – சாலையில் செல்லுமுன் நினைவில் கொள்ள வேண்டியவை – முடிவுரை.

(அல்லது)

ஆ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

41. கொடுக்கப்பட்டுள்ள தன்விவரப் படிவத்தினை நிரப்புக.

## தன் விவரப் படிவம்

1. பெயர் : ______________________
2. வகுப்பு : ______________________
3. பள்ளி : ______________________

______________________

4. பெற்றோர் : ______________________

______________________

5. முகவரி : ______________________

______________________

______________________

______________________

6. தொலைபேசி எண் : ______________________

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com